பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

NEW SCIENCE ACADEMY
KANNATHIDDY ROAD,
JAFFNA.
90 A/L
WEEKEND
PAPER CLASSES
நடைபெறுகின்றது.

உதயன்

விலை ரூபா 3/50

NEW SCIENCE ACADEMY
IN FRONT OF B. M. C.
JAFFNA.
DAY CLASS
பிரிவு I
பிரிவு II
நடைபெறுகின்றது.

சார் 5 சுக்கில ஞ மாசி மீ 22 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 08 (06-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 26

# வடக்கு கிழக்கு மாகாணசபையை கலைப்பதா?
# சர்வகட்சி விவாதத்தின்பின் முடிவு!

## பல தரப்பு கருத்துக்களையும் ஜனாதிபதி கேட்டறிந்த பின்னர் தீர்மானிப்பார்

கொழும்பு, மார்ச் 6

வடக்கு, கிழக்கு மாகாணசபை ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக தன்னைப் பிரகடனப்படுத்தியிருப்பதை அடுத்து எழுந்துள்ள சிக்கல் நிலை குறித்து நாடாளுமன்றத்தில் சர்வ கட்சி விவாதம் ஒன்று நடைபெறும்.

இந்த விவாதத்திற்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி, பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை உட்பட அனேகமாக எல்லாக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

இந்த விவாதத்தில் பல கட்சிகளும் தெரிவிக்கும் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைப்பதா என்பது குறித்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தீர்மானிப்பார் என்று அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு-கிழக்கு மாகாண சபை தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் நிலை குறித்து எதிர்க் கட்சிகளின் கருத்தை அறிந்து அதன் பின்னரே தீர்க்கமான முடிவை எடுக்க ஜனாதிபதி விரும்புவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக் கூடியபோது, இந்த விடயம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடத்துவது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டதாக அறிய வந்தது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையை உடனடியாகக் கலைக்க வேண்டும் என சில எதிர்க் கட்சிகள் வற்புறுத்தி வருவதாகவும் அறியவந்தது. (உ)

## சுப நேரம்

6 - 3 - 1990
செவ்வாய்க்கிழமை மாசி 22
சுப நேரம்:
10-56 முதல் 12-26 வரை
ராகுகாலம்:
3-26 முதல் 4-56 வரை
தசமி
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## பாடசாலைகள் நேற்றும் ஒரு நேரமாகவே இயங்கின

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ் - மாவட்டப் பாடசாலைகள் வழமைபோல் நேற்று ஒரு நேரமாகவே இயங்கின.

நேற்றுமுதல் யாழ் மாவட்டப் பாடசாலைகள் இரு நேரமாக இயங்கவிருப்பதாக வெளியான செய்திகளை அடுத்து அதிபர்களிடையேயும் மாணவர்களிடையேயும் குழப்பநிலை நிலவி வந்தது.

பல பாடசாலை அதிபர்கள் காலையில் பாடசாலை ஆரம்பமாகும்போது கூட்டப்படும் மாணவர் கூட்டங்களில்—

'பாடசாலைகளை இரு நேரமாக இயக்கும் திட்டம் விரைவில்நடைமுறைக்குவரும் என்றும், பிரதிக் கல்விப்பணிப்பாளரின் சுற்றுநிருபம் கிடைக்கவில்லை, கிடைத்ததும் அதுவிடயமாக அறிவிக்கப்படும்என்றுதெரிவித்தனர்.

பாடசாலைகளை இருநேரமாக இயங்கவைக்கும் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதியில் இருந்து நடைமுறையாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வேளை பாடசாலை பஸ் சேவையும் மாலையில் 4 மணி வரை நடாத்தப்படும் என டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

## பிரேமா-மாத்தயா நேற்றிரவு இரண்டரை மணி நேரம் பேச்சு

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜாவுக்கும் (மாத்தயாவுக்கும்) இடையில் நேற்று இரவு சுமார் இரண்டரை மணி நேரம் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சுசரித வாசஸ்தலத்தில் நேற்றிரவு 8 மணிக்கு ஆரம்பமான பேச்சுவார்த்தைகள் இரவு 10-30 மணிவரை நீடித்தன.

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் தரப்பில் அதன் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், திரு. சுரேஸ் ஆகியோரும் பங்குபற்றினர்.

பேச்சுவார்த்தைகளின் விவரம் குறித்து நேற்றிரவு தகவல் ஏதும் வெளியிடவில்லை. [உ]

## வடக்கு, கிழக்கில் பயிலுநர் ஆசிரியர்கள் 4 ஆயிரம் பேருக்கு நியமனம்

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நான்காயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் பெறுவர்.

இவர்களில் முதல் தொகுதியாக 800 பேர் இம் மாதம் 7 ஆம் திகதி திருமலை மாவட்டத்தில் நியமிக்கப்படுவர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை - கல்முனை ஆகிய மாவட்டங்களுக்கான ஆசிரிய நியமனம் அடுத்த இரண்டு வாரங்களில் இடம்பெறும்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த மாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

புதிய நியமனங்களில் 60 சத வீதமானவை பெண்களுக்குத்தான் கிடைக்க உள்ளன. (ஒ,எ)

## இறுதிப் பட்டியல் தாமதமாகும்

பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் இறுதிப் பட்டியல்களை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பட்டியல்கள் அடுத்த வாரத்திலேயே வெளியிடப்படும் என அறிய வருகிறது.

விசேட உத்தரவு ஒன்றை அடுத்து யாழ். மாவட்டம் தவிர்ந்த வடக்கு - கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டோரின் இறுதிப் பட்டியல்கள் கடந்த 4 ஆம் திகதி பரிசீலனைக்காக மத்திய அரசின் கல்வி அமைச்சில் சமர்ப்பிக்கப்பட்டது.

கல்வி அமைச்சு அந்தப் பட்டியல்களைப் பரிசீலனை செய்து எதிர்வரும் 12 ஆம் திகதியே அங்கீகாரம் வழங்கும் எனத் தெரிய வந்தது.

அதனை அடுத்தே இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

### பி. பி. ஸி. கருத்து

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் இடையே நடந்துவரும் பேச்சுவார்த்தைகள் முடிவடையும் போல் தென்படுவதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

# ஸ்ரீலங்கா படையிடமிருந்து ஈழ மக்களை பாதுகாக்கும் பலம் எம்மிடம் இருக்கிறது !

## புலிகள் பிரமுகர்கள் தகவல்

சென்னை, மார்ச். 6

"பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையின் அடிப்படையில்தான் நடக்கின்றன. நாங்கள் பலத்தோடு பேசுகின்றோம். ஸ்ரீலங்கா இராணுவம் தாக்கினால் ஈழமக்களைப் பாதுகாக்கும் பலம் எங்களுக்கு இருக்கிறது"

— இப்படிக் கூறியிருக்கிறார்கள் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் திரு. யோகரட்ணம் யோகி, திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர்.

தமிழகத்திலிருந்து வெளியாகும் ஜூனியர் விகடன் [28-02-1990] இதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர்கள் இப்படித் தெரிவித்திருக்கின்றனர். பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:-

கேள்வி: 'துப்பாக்கி பலத்தில்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு தாக்குப் பிடிக்கிறது... மக்களிடம் அதற்கு ஆதரவில்லை' என்ற பிரசாரம் பற்றி...?

பதில்: துப்பாக்கிதான் பலம் என்றால், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கிகளும், இந்தியாவால் தமிழ் தேசிய இராணுவத்துக்குத் தரப்பட்ட 12 ஆயிரம் ஆயுதங்களும் - ஒரு சில ஆயிரம் புலிகளை வென்றிருக்க வேண்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் எம்.பிக்கள் இன்று நாடாளுமன்றம் செல்வர்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஈரோஸ் எம்பிக்கள் இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் மீண்டும் செல்வர்.

இத்தகவலை ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் உதயனுக்கு வெளியிட்டார்.

கடந்த ஜனவரி முதல் ஈரோஸ் எம்பிக்கள் நாடாளுமன்றம் செல்லாது இருந்து வந்தனர் என்பது தெரிந்ததே. (உ-எ)

# ஈரோஸ்-விடுதலை புலிகள் 'உரசல்நிலை' ஏற்பட்டதா?

## பாலகுமாரன் உதயனுக்கு விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஈழப்புரட்சி அமைப்புக்கும், [ஈரோஸ்] தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே "உரசல் நிலை" தோன்றியதா? "உரசல் நிலை" ஏற்படக் காரணம் என்ன? இதற்கான சந்தர்ப்ப சூழ் நிலைகளை விளக்கியுள்ளார் திரு. பாலகுமாரன்.

ஈரோஸ் இயக்கத்தின் முக்கியஸ்தரான திரு. வே. பாலகுமாரன் நேற்று உதயனுக்கு அளித்த விரிவான பேட்டியிலேயே இவற்றைத் தெளிவுபடுத்தினார்.

அந்தப் பேட்டி வருமாறு:-

கேள்வி: ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தின் சுதந்திரத் தமிழீழப் பிரகடனம் பற்றி...

பதில்: அது தெளிவாக இல்லை. சுதந்திர ஈழம் பிரகடனம் மாதிரியாகவும் இல்லை. ஈழம் பிரகடனம் செய்வதானால் இடைக்கால அரசு ஒன்று (Exile Goverment) அமையவேண்டும்.

இப்போதைய பிரகடனம் சுதந்திர தமிழீழத்துக்கு கொடுத்த நோட்டீஸ் மாதிரி தென்படுகிறது.

இதனை எந்த அளவில் எடுப்பது என்பது தெரியவில்லை. அர்த்தமில்லாத

(5ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் காங்கிரஸ் கட்சி அமைச்சர் ஹமீதுடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 6

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நேற்று முன்தினம் கொழும்பில் அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீதுவுடன் பேச்சுக்கள் நடத்தியது.

தமிழ்க் காங்கிரஸின் சார்பில் திரு. குமார் பொன்னம்பலமும், திரு. மோதிலால்

(5ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



நாலாயிரம் வாத்திமாரின்ர தலைவிதி அப்ப கொழும்பிலை தான் தங்கியிருக்கு எண்டு சொல்லுங்கோ...!

# ரஞ்சன் தமிழீழத்துக்குள் வர சுங்க அனுமதி பெற வேண்டுமாம்

## இப்படிச் சொல்கிறார் வரதர்

கொழும்பு, மார்ச் 6

தமிழீழம் எல்லைக்குள் வருவதற்கு அமைச்சர் ரஞ்சன் தான் முதலில் சுங்க அனுமதி பெற்றாக வேண்டும்.

இவ்வாறு முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு நீங்கள் விஜயம் செய்தது பற்றி கொழும்பு சுங்கத் திணைக்கள அதிகாரிகள் விசாரணையை நடத்தப் போவதாகக் கூறப்படுவது பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கப்பட்டபோதே திரு. வரதராஜப்பெருமாள் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

திரு. அ. வரதராஜப்பெருமாள் திருகோணமலையில் இருந்து கொழும்பில் உள்ள ஆங்கில பத்திரிகைளான சன், ஐலண்ட் ஆகியவற்றுக்கு அளித்த பேட்டிகளின் தொகுப்பு வருமாறு:-

கேள்வி: சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து அமைதிப்படையை விலக்குவதைத் தாமதப்படுத்தும்படி இந்தியாவைக் கேட்டிருக்கிறீர்களா?

நான் அப்படி ஒரு வேண்டுகோளும் விடுக்கவில்லை. அமைதிகாக்கும் படை எமக்குத் தேவை இல்லை.

எங்கே அமைதி இருக்கிறது? அமைதி ஒப்பந்தமே செயலிழந்து விட்டது. இந்த ஒப்பந்தம் தான் அமைதிப்படையை இங்கு கொண்டு வந்தது.

இப்போது ஒப்பந்தமும் இல்லை; அமைதிகாக்கும் படை தேவையுமில்லை.

கேள்வி: அமைதிப்படை விலகியவுடன் நீங்களும் இந்தியா சென்று விடுவீர்களா?

நான் ஏன் இந்தியா போக வேண்டும்? எமது பிரதேசம் விஸ்தீரணம் 7 ஆயிரம் 600

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு சிறு 'விளம்பரம்


### விற்பனைக்கு

யாழ். எல்லைக்குள் சகல வசதியும் கொண்ட 2½ பரப்பு காணியில் மூன்று படுக்கை அறைகளை கொண்ட வீடும், வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வை. நவராசா, 'மிதிலை' ஸ்ரேஷன் றோட், சுன்னாகம் கிழக்கு. (2812)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Unsex) தனிசிசுந்பு, சறுப்பு நிற சேவல். பேடு (பிலிமத்) கறுப்பு வரிசேவல் (Dekalb) பிறவுண் பேடு, சேவல் [Cobb] புறொயிலர் குஞ்சுகள் (7 - 3 - 90) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல, 9 கந்தையா ஒழுங்கை, சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (11949)

### தேவை

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்திற்கு அனுபமுள்ள சமையல் ஆள், ரீமேக்கர், வெயிற்றர், சமையல் உதவி ஆட்கள் தேவை. 10-3-1990 காலை 10-00 மணிதொடக்கம் 4மணி வரை நேரில் வரவும். ''டாட்டா கிறீம் ஹவுஸ்'' No. 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ராஜீஸ்ரோஸ் முன்பாக) (2807)

### மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள 28வயதுடைய U. S. A. எஞ்சினியருக்கு டாக்டர் பெண் தேவை. 30வயதுடைய U.K. எக்சவுன்டனுக்கு B.sc. பட்டதாரி எக்கவுன்டன் பெண்தேவை. இருசாதகங்களும். செவ்வாய்க்குற்றம் அற்றவை. தொடர்பு 328, நாவலர்றோட் ஆனைப்பந்தி (11953)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். அனுபவமுள்ள புத்தகம் கட்டுபவர் Binder நேரில் வரவும். Second Hand Book House, (முரசொலிக்கு முன்லேன்) 13/6 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (2808)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### கணிதம்

**மயூரதி வெளியீடுகள்**

G. C. E. O/L கணிதம் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. ரூ. 17/50, ரூபா 30/- ஆண்டு - 9 கணிதப் பயிற்சி 1 மயூரதி வெளியீடு -6, ரூபா 16-50 பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஞானசுரபி, துர்க்கா ஸ்ரேசனஸ் மற்றும் புத்தக சாலைகளில். (2574)


மட்டக்களப்பில்

# அன்னை பூபதி நினைவு தினம் பெரும் அளவில் அனுஷ்டிக்க ஏற்பாடு

மட்டக்களப்பு, மார்ச். 6 சாகும் வரையிலான உண்ணாவிரதப் போரில் உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளை ஈராண்டு நினைவு நாளை மட்டக்களப்பில் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை அன்னையர் முன்னணி மேற்கொண்டுள்ளது.

''தமிழீழ விடுதலைப் புலிகள்-இந்தியப்படை யுத்த நிறுத்தம்''

''இந்தியா விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை''

இந்த இரு கோரிக்கைகளையும் முன்வைத்து அன்னை பூபதி கணபதிப்பிள்ளை மார்ச் 13 இல் உண்ணாவிரதம் ஆரம்பித்து ஏப்ரல் 12 இல் உயிர் நீத்தார்.

மேற்படி நினைவு நாள் தொடர்பான நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

''அன்னை பூபதி நினைவு பணி மன்றம்'' இதற்காக அமைக்கப்பட்டுள்ளது. (இ-21)

## ஷப்றா அணி வெற்றி
### யாழ். இந்துவின் பெருந்தன்மை

யாழ்ப்பாணம் மார்ச் 06 யாழ் இந்துக்கல்லூரி அணிக்கும் ஷப்றா அணிக்குமிடையில் நடந்த சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் ஷப்றா அணி 7 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

முதலில் ஆடிய யாழ். இந்து அணி 146 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயராஜ் 55, நரேந்திரன் 46, ஓட்டங்களைப் பெற்றனர். நித்தியராஜன் 5 விக்கட்டுக்களையும் இளங்கோ 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

ஷப்றா அணி தனது முதல் இனிங்சில் 174 ஓட்டங்களைப் பெற்றது. பத்மஜெயந் 39, விஜயகுமார் 23, முருகவேள் 21, குலசிங்கம் 21, வீரசிங்கம் 17, ஜயந்தன் 12, சண்முகலிங்கம் 12 ஓட்டங்களைப் பெற்றனர். நரேந்திரன் 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

யாழ் இந்து அணி தனது 2 ஆவது இனிங்சில் 3 விக்கட்டுகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தி, ஷப்றா அணிக்கு 10 ஓவர்களில் 121 ஓட்டங்கள் என்ற இலக்கினை கொடுத்தது. யாழ் இந்துவின் இந்த விளையாட்டுப் பெருந்தன்மையுள்ள ஆட்டநிறுத்தத்தை ரசிகர் பலரும் பாராட்டினர். யாழ். இந்துவிற்காக வரதன் விரைவாக ஆடி ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும், ராஜசேகர் ஆட்டமிழக்காமல் 49, கோபிநாத் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஷப்றா அணியினர் 9.4 ஓவர்களில் 3 விக்கட்டுகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றனர். ஷப்றா அணியினரின் வெற்றியை வித்தியாதரன் ஆட்டமிழக்காமல் விளாசிய 66 ஓட்டங்களும், பத்மஜெயந் 28 ஓட்டங்களும், விஜயகுமார் ஆட்டமிழக்காமல் அடித்த 19 ஓட்டங்களும் உறுதிசெய்தன. (இ)

## உடற்பயிற்சிப் போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 6 வடமராட்சி கோட்ட உடற்பயிற்சிப்போட்டி 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 8 30 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தலைமையில் நடைபெறும். கொத்தணி மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றுள்ள அணிகள் இப்போட்டியில் பங்குபற்றும். (இ)

பாடசாலைகள் கிரிக்கெட்

## யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச்6 மகாஜனாக்கல்லூரிக்கும் யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி இனிங்ஸால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணக்கல்லூரி அணி 227 ஓட்டங்களை 8 விக்கட் இழப்பிற்கு பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. பாரத் 65 ஜென்சன் 58 ஓட்டங்களைப் பெற்றனர்

மகாஜனாக்கல்லூரி தனது முதல் இனிங்சில் 79 ஓட்டங்களைப் பெற்றது சிராளன் 21 ஓட்டங்களை பெற்றார்.

விரசுதன் 6 விக்கெட்டுகளையும் ராஜன் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடப்பணிக்கப்பட்ட மகாஜனாக்கல்லூரி தனது இரண்டாவது இனிங்சில் 133 ஓட்டங்களையே பெற்றது விஜயகுலன் 75 ஓட்டங்களையும் ரஜீவன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். விஜயகுலன் 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினார். (இ)

## வடிகால்களில் துர்நாற்றம்

குருநகர், மார்ச் - 6 யாழ் நகரப் பகுதியிலுள்ள வடிகால்களில் கழிவுநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகிறது. இதன் காரணமாக நுளம்பு அதிகரித்து தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளன. (இ 61)

ஆசிரியர் பயிலுநர் நியமனம்

## மட்டக்களப்பு மாவட்டம் இதுவரை 950 முறையீடுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியர் பயிலுநர்கள் நியமனம் தொடர்பாக 950 முறையீட்டு விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன.

இத்தகவலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு கே. சோமசுந்தரம் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு 5022 பேர் அழைக்கப்பட்டனர். 427 பேர் நியமனம் பெறவுள்ளனர்.

பெயர் பட்டியல் புள்ளி விபரங்களும் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

மேன் முறையீடுகள் தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார் (இ-21)

## பாலைதீவில் குடிதண்ணீர் இன்றி யாத்திரிகர்கள் அவதி

குருநகர், மார்ச் 6 பாலைதீவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை திருநாள்கொண்டாட்டம்நடைபெறாதென்ற அறிவித்தலை அடுத்து திருச்சபை அரச உதவிகள் தீவுக்கு அனுப்பப்படவில்லை.

யாத்திரிகர் தமக்குத் தேவையான குடிதண்ணீரை எடுத்துச் செல்கின்றனர்.

இதே வேளை யாத்திரிகர் பாலைதீவுக்குப் பெரும் எண்ணிக்கையில் சென்றுள்ளதால் வியாபாரிகள் கடைகளை நிறுவ அங்கு பொருட்களுடன் சென்று கொண்டிருக்கின்றனர். (இ-51

## மீனவர்களுக்கு நிபந்தனை

புதுக்குடியிருப்பு மார்ச் 6 முல்லைத்தீவு பிரதேசத்தில் கடற்றொழில் செய்யும் வெளி மாவட்டமீனவர்களுக்குபுதிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன்படி இனி முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடிக்க வரும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர்சங்கத்திடம் இருந்து உத்தரவாதம் ஒன்றைப் பெற்று அதனை முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

அதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தைச்சேர்ந்தகடற்றொழிலாளர்கள், சம்பந்தப்பட்டவர்களது பிரதேசங்களில் மீன்பிடிப்பதற்கு எதுவித தடையும் விதிக்கப்படமாட்டாது'' என்ற உத்தரவாதம்வழங்கப்படவேண்டும். (இ-126)

## மீண்டும் நொத்தாரிஸ் பரீட்சை

கொழும்பு மார்ச் 6 அடுத்த ஆண்டு தொடக்கம் நொத்தாரிஸ் பரீட்சைகள் நடாத்தப்பட உள்ளன.

இதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் திரு. யு. பி. விஜேகோன் இப்பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும் எனசிபார்சு செய்திருந்தார்.

கடைசியாக நொத்தாரிஸ் பரீட்சை 1981 ஆம் ஆண்டிலேயே நடைபெற்றன. (இ)


## வேலை வாய்ப்பு
### சிங்கப்பூர்
HOUSE — MAIDS

★ சம்பளம் ரூபா 3200/-
★ நீடிக்கக் கூடிய இருவருட ஒப்பந்தம்
★ மாதம் ஒருநாள் விடுமுறை
★ தங்குமிடம், உணவு யாவும் இலவசம்
★ வயது 16 தொடக்கம் 35 வரை
★ 6ஆம் வகுப்பு சித்தியுடன், ஆங்கிலம் ஓரளவு தெரிந்தவர்கள் உடன் நேரில் விண்ணப்பிக்கவும்
★ பாஸ்போட், பொண்டிங், புதிப்பித்தல் ஆகியவைகளும் மிக குறுகியகாலத்தில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க:
**Adam's Peak Travel**
முருகன் வீதி,
(பழஞ்சந்தி அருகாமையில்)
ஆடியபாத வீதி ஊடாக திருநெல்வேலி, வடக்கு.
(2730)

## தான்சன் கல்வி நிலையம்
கே. கே. எஸ். றோட் — தெல்லிப்பழை

O/L WEEK END CLASSES DEC — 90

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

வகுப்புநேரம்: காலை 7மணிமுதல் பி.ப. 2மணிவரை

ஆரம்பம்: 10-03-90 (சனி) காலை 7 மணி

நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — 7 மணி | — J. R. சூரி |
| கணிதம் | — 8 மணி | — மதி |
| தமிழ் | — 9 மணி | — கணேஷ் |
| கணிதம் | — 10 மணி | — மகேந்திரன் |
| சமூகக்கல்வி | — 11 மணி | — திருக்குமார் |
| ஆங்கிலம் | — 12 மணி | — ஹரிதாஸ் |
| வர்த்தகம் | — 1 மணி | — வரதன் |

★ தூர இடத்து மாணவரின் நலன் கருதி இவ்வாண்டு முதல் ஆரம்பிக்கின்றோம்.

[சி-3433]

## ★ சவுதி
## வேலை வாய்ப்பு

| | | No |
|---|---|---|
| 1. | Technical Manager | 01 |
| 2. | Safety Officer | 02 |
| 3. | Senior Suprintendent Operation | —01 |
| 4. | Senior Suptd Management & Documentation | —01 |
| 5. | Senior Suptd Maintenance & Repairs | —01 |
| 6. | Senior Supervisor, Vessels & Berths Operation | —01 |
| 7. | Supervisor Berths & Ships | —05 |
| 8. | Chief Checker... Cargo | —02 |
| 9. | Supervisor ... Warehouse | —01 |
| 10. | Foreman-Ships/Berths/Labourer | —12 |
| 11. | Tally Clerks | —12 |
| 12. | Ware House - Storekeeper | —03 |
| 13. | Mechanical Supervisor | —01 |
| 14. | Electrical Supervisor | —01 |
| 15. | Ship & Shore Worker | —128 |
| 16. | Diesol Mechanic | —02 |
| 17. | Electrician | —02 |
| 18. | Hydraulic Technician | —02 |
| 19. | Skilled Labourer | —08 |
| 20. | Carpenter | —02 |
| 21. | Unskilled Labourer | —04 |
| 22. | Dangerous Materials Tech Sup | —01 |
| 23. | English Typist | —01 |
| 24. | Male Nurse | —01 |
| 25. | Documents Clerk | —02 |
| 26. | Doctor | —01 |
| 27. | Forklift Driver | —20 |
| 28. | Head Truck Driver | —06 |
| 29. | Moodle Crane Driver | —02 |
| 30. | Synch Rolift Driver | —02 |

உடனடியாக
பாஸ்போட், சான்றிதழ்கள், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

**A. தவச்செல்வம்**
B. Sc (Hons)
நெல்லியான் றோட்,
சுழிபுரம்.
(C-3476)

## ★ சவுதி அரேபியப் பிரயாணம் ★

| | | |
|---|---|---|
| 1. | Plumber | — 550 SR |
| 2. | Sewerage Treatment Technician (கழிவு நீர் சுத்திகரிப்பு உத்தியோகத்தர்) | — 750 SR |
| 3. | Pest Control Technician (கிருமிநாசினி கட்டுப்படுத்தும் உத்தியோகத்தர்) | — 750 SR |
| 4. | Accounts Clerk (Cashier experience) | — 700 SR |
| 5. | Dispatches | — 650 SR |
| 6. | Radio T.V. Technician | — 700 SR |
| 7. | First aid Man (நீந்தும் அனுபவத்துடன்) | — 800 SR |
| 8. | Store - keeper | |
| 9. | Cook (மேலைத்தேய, கீழைத்தேய சமையல் அனுபவத்துடன்) | |
| 10. | Mechanic | |
| 11. | Typist | |
| 12. | Auto electrician | |
| 13. | Trailer Driver | — 800 SR |

● மேற்கண்ட வெற்றிடங்களிற்கு சற்றேனும் ஆங்கில அறிவு தேவை.
●● இவற்றிற்கு நேர்முகப் பரீட்சை உண்டு.
●●● நேர்முகப் பரீட்சையில் தெரிவானால் இரு வாரங்களில் பயணம் மேற்கொள்ளலாம்.
●●●● இது ஒரு AMERICAN COMPANY

உடன் தொடர்பு கொள்ளவும்:

**'M' Three Travel**

Indrabawanam
Sothy Road,
Kankesanthurai.

No. 1, 2nd Lane,
Power House Road,
Jaffna.

(சி/3479)

## ENGINEERING COUNCIL EXAMINATION
(London)
Formerly (C E I)
### Part I & II - May 91

A Rare Opportunity for those who wish to take up Engineering for a career Although they have failed to gain Entrance to the University.

If you have 2 PASSES IN G. C. E. (A/L) contact us for Guidance to prepare for E. C. E. part I & II Examinations Conducted by Council of Engineering, London.

Hurry to secure a Place in the May 91 Part I & II Bach (Week end Classes) due to Commence on 10th March 1990.

**WESTING HOUSE INSTITUTE OF TECHNOLOGY,**
**52, Hospital Road,** [Koddady Junction]
**JAFFNA.**

In Weekdays, Contact at:
49, Hospital Road,
(Opp. Video Pirasad)
JAFFNA.

Director
S. THAVASELVAN
(2788)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல்.

**பொருள்:**
மக்களே போல் இருப்பவர் கயவர்; அவர் மக்களை ஒத்திருப்பது போன்ற ஒப்புமை வேறு எந்த இருவகைப் பொருள்களிடத்திலும் யாம் கண்டதில்லை.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
06- 03- 1990 த. பெ. இலக்கம் : 23


## நடமாடும் சுகாதார சேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவினால் நடத்தப்படும் நடமாடும் சுகாதார சேவை நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கோப்பாயில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இச் சேவை இவ்வாரம் மானிப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பின் தங்கிய கிராம மக்கள் உட்பட சகலருக்கும் சுகாதார சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதே இந்தச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டதன் நோக்கம் ஆகும்.

இதனை முன்னரே ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது, எனினும் வடபகுதியில் நிலவிய அசாதாரண நிலமை காரணமாக தாமதம் ஏற்பட்டது.

கடந்த காலச் சம்பவங்களினால் நலிவுற்று முன் எப்போதுமில்லாதவாறு சுகாதார சேவைகள் அத்தியாவசியமான காலத்தில் மக்களுக்கு இச்சேவை கிடைப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது.

நடமாடும் சுகாதார சேவைப் பிரிவு வாகனச்சாரதி உட்பட நால்வரைக் கொண்டிருக்கும்.

சமீபத்தில் அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட- சுகாதாரச் சேவையாளர்கள் கைவிட்டுச் சென்ற பின்தங்கிய கிராமங்களையே இவர்கள் தமது திட்டத்திற்காக முதலில் தெரிவு செய்துள்ளனர். இது வரவேற்கத்தக்கது,

பரந்த இடங்களைத் தெரிவு செய்து மேல் எழுந்த வாரியாகச் சேவை செய்வதை விட பின்தங்கிய சிறிய இடங்களைத் தெரிந்து அங்குள்ள சுகாதார தேவைகளை நுணுக்கமாகக் கண்டறிவது எதிர்பார்த்த பலனை அளித்தே தீரும்.

ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டிய எத்தனையோ நோயாளிகள் வீடுகளில் இருப்பதையும் பின் தங்கிய கிராமங்களில் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதற்கு அறியாமை ஒரு காரணமாக இருக்கலாம் பண வசதி இன்மையும் காரணமாகலாம்.

இப்படியானோர் விடயத்தில் நடமாடும் சுகாதாரச் சேவை பெரும் தொண்டாற்ற முடியும்.

பின்தங்கிய கிராமங்களில் இன்று உள்ள பிரச்சனைகளில் ஊட்டச்சத்துக் குறைவு, சுகாதாரத்துக்குப் பங்கமேற்படுத்தும் குடிதண்ணீர், மலேரியா, வயிற்றோட்டம் குடற்பூச்சி ஆகியன முக்கியமானவையாக இருந்து வருகின்றன.

சம்பந்தப்பட்ட பகுதி சுகாதார வைத்திய அதிகாரியுடனும், சுகாதாரச் சேவையாளர்களுடனும் மற்றும் உள்ளூர் சமூக சேவை ஸ்தாபனங்களுடனும் தொடர்பு கொள்வது மூலம் நடமாடும் சுகாதாரச் சேவை அளப்பரிய சேவை ஆற்ற முடியும்.

அத்துடன் இச் சேவை ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

# பாரம்பரியங்களைக் காட்டும் நாடகங்கள் அழிந்துவிட்டன

## யாழ் பல்கலை உபவேந்தர் உரை

யாழ்ப்பாணம், மார்ச். 6

எம்பாரம்பரியங்களை எடுத்துக்காட்டும் பழம்பெரும் நாடகங்கள் அழிந்துவிட்டன. 'காத்தவராயன்' நாடகம் அழியாப் பொக்கிசமாக விளங்க இந்த வீடியோ நாடா உதவும்.

இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா.

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஆதரவில் காத்தவராயன் நாடகக் கலைஞர்களைக் கௌரவித்தலும், நாடக ஒலிப்பதிவு நாடா வெளியீடும் நடைபெற்றன.

மன்றத்தின் துணைத் தலைவி செல்வி து. சைலஜா தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:-

மரபுசார் கலைகள் பல்கலைக்கழக தமிழ், இந்து துறைகளுடன் இணைக்கப்படவேண்டும். இந்தக் கலைகளை பல்கலைக் கழகம் வளர்ப்பதன் மூலம் சமுதாயத்துடன் இணைப்பு ஏற்பட வழிபிறக்கும் என்றார்.

பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரன் பேசுகையில்.

இந்த நாடகத்தை நேரே பார்க்கும் போது இருக்கும் ரசனை தொலைக்காட்சியில் பார்க்கும் போது இல்லை அத்துடன் இப்படி நாடா மூலம் இந்த நாடகம் வருவதன் மூலம் மேடை ஊக்கம் குறைந்துவிடும் என்றார்.

கல்வித்துறைத் தலைவர் திரு. வ. ஆறுமுகம் பேசுகையில், இதே போன்று பாரம்பரிய கூத்துக்களையும் நாடா மூலம் வெளியிட முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார்.

சிரேஷ்ட விரிவுரையாளரும் நாடக தயாரிப்பாளருமான கலாநிதி இ. பாலசுந்தரம் பேசுகையில் காத்தவராயன் நாடகம் மூலம் கிடைக்கும் நிதியில் ஒரு பகுதியைக் கொண்டு பல்கலைக்கழக புலமைப் பரிசில் வழங்கவிருக்கிறோம் என்றார்.

கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை நாடகத்தையும், கலைஞர்களையும் விமர்சனம் செய்தார்.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை கலைஞர்களுக்கு சான்றிதழ்களைவழங்கினார். [இ-3]

## நூல் நிலையம்

கிளிநொச்சி மார்ச் 6

கிளிநொச்சி கல்வி மாவட்ட முறைசார கல்வி பிரிவினரால் சுயதொழில் வழிகாட்டி நூல்கள் அடங்கிய நூல் நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்வித்திணைக்கள கட்டடத்தில் இயங்கும் நூல் நிலையத்துக்கு வெளிக்கள உத்தியோகத்தர் திரு. சின்னத்துரை பொறுப்பாக உள்ளார் (இ-76)

## அதிபர் முன்மாதிரி

புதுக்குடியிருப்பு மார்ச் 6

புதுக்குடியிருப்பு சி. சி. பாடசாலையில் 5ம்ஆண்டுபுலமைப் பரீட்சையில் சித்தி அடைந்த 5 மாணவர்களுக்கும் அதிபர் தமது அதிபர் பதவிக்கு என வழங்கப்படும் விசேஷப்படி 1200 ரூபாவை பங்கிட்டுவழங்கினார். (இ126)

யாழ். மாநகரசபைக்கு

# சோலை வரியால் கூடுதல் வருமானம்

யாழ்ப்பாணம் மார்ச் - 6

யாழ் - மாநகரசபைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் சோலை வரியைக்கட்டுவதில் கூடுதல் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ் மாநகரசபை அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வரியிறுப்பாளர்கள் தம் வரிகளை கட்டுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் கடந்த இரு மாதங்களில் அவர்கள் காட்டும் ஆர்வத்தால் கூடுதல் பணம் கிடைத்துள்ளது. எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ - 3)

## கொடிகாமம் கலிகை வீதி

கரவெட்டி மார்ச் 6

கலிகையில் இருந்து கொடிகாமம் செல்லும் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருக்கின்றது. (இ-70)

## கால்நடை வளர்ப்புக்கு ரூபா 5000 வரை கடன்வசதி

மானிப்பாய் மார்ச் 6

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களான இளைஞர் - யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கென ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத கடன் வழங்கப்படும். சங்கத்தின் 12 கிளைகள்மூலம் இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறானதீர்மானம்ஒன்றையாழ்ப்பாணம்கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் எடுத்துள்ளது.

சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியர் டாக்டர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. (இ- 90)

## சைவத் தொண்டர் நிலையம் பற்றி அமைப்பாளர் அறிக்கை

கொழும்புத்துறை, மார்ச் 6

''இன்றைய சூழ்நிலையில் சைவத் தொண்டர்களின் சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் முகமாகவே சைவத் தொண்டர் நிலையம் உருவாக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு தொடக்கம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் யாழ். மாவட்டஇந்து இளைஞர் பேரவை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் போன்ற பல அமைப்புக்களின் கீழ் பல சைவசமய ஆலயங்களில் தொண்டர் சேவை ஆற்றி வந்த நாம் இவ்வருடம் முதல் சைவத் தொண்டர் நிலையம் என்ற புதிய அமைப்பினை நிறுவியுள்ளோம்.

இவ்வாறு சைவத் தொண்டர் நிலைய அமைப்பாளரும் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தொண்டர் சேவை ஆணையாளருமாகிய திரு. இ. சுவாமிநாதன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (இ-30)

## மயானத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம் மார்ச் 6

வண்ணார்பண்ணை கோம்பையன் மணல் மயானத்தில் இரு வாரங்களாக சிரமதான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இச்சிரமதான வேலைகளை மானிப்பாய்வீதி, அராலிவீதி பழம்வீதி ஆகிய இடங்களில் கூடியிருக்கும் ஜனசக்தி உதவியைப் பெறும் மக்களே மேற்கொண்டு வருகின்றனர்.

## அபிவிருத்திவேலைகளைஉடன் பூர்த்தி செய்யுமாறு பணிப்பு

காங்கேசன் மார்ச். 06

1987 இல் நிதி ஒதுக்கி நிறைவேற்றப்படாமல் இருக்கும் அபிவிருத்தி வேலைகளை உடனடியாக பூர்த்தி செய்யும்படி யாழ். பிராந்தியஉள்ளூராட்சி ஆணையாளர் பணித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுநாட்டுநிலைமை காரணமாகவும், விலை வாசி ஏற்றத்தினாலும் பல அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

வலி. வடக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் இவ்வாறு ஸ்தம்பித்திருந்த வேலைகளை மீள் ஆய்வு செய்து மதிப்பீடுகளை அங்கீகரித்து சனசமூக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் ஸ்தாபனங்கள் ஊடாக உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபை விசேஷ ஆணையாளர் திரு. வை. இராசையா, பிரதம தொழில் நுட்ப அத்தியட்சகர் திரு. சு. நித்தியானந்தன் ஆகியோரின் மேற்பார்வையில் ஸ்தம்பித்திருந்த வேலைகள் சில தற்போது நடந்து கொண்டும், சில பூர்த்தியாகியும் உள்ளன. (இ-68)

# போதிய அரசு உதவி இன்றி தமிழ்ப் பகுதி தேசிய பாடசாலைகள்

யாழ்ப்பாணம் மார்ச் 6

தமிழ்பேசும் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட இரண்டு தேசிய பாடசாலைகளுக்கும் அரசு எந்தவித உதவியும் வழங்குவதில்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டது.

84 ஆம் ஆண்டு நாட்டில் உள்ள 18 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக அரசு உருவாக்கிய போது யாழ்- இந்துக்கல்லூரியையும், வேம்படி மகளிர் கல்லூரியையும் தேசிய பாடசாலைகளாக்கியது.

நாட்டிலுள்ள மற்றைய தேசியப் பாடசாலைகளுக்கு தாராளமாக உதவிகள் வழங்கிய போதும், இந்த இரு பாடசாலைகளுக்கும் எந்தவித உதவிகளோ கட்டடநிதிகளோ வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பாடசாலை ஆக்கியதன் மூலம் அளிக்க வேண்டிய வசதிகள் கூட வழங்கப்படவில்லையே என்றும் தெரிவிக்கப் படுகிறது.

## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம் மார்ச். 06

உள்ளூராட்சித் திணைக்களத்தில் சிற்றூழியர்களாகப் பணியாற்றி வருபவர்களுக்கு பதவி உயர்வு வழங்க போட்டிப் பரீட்சை நடத்தப்பட இருக்கின்றன.

இந்தப் போட்டிப்பரீட்சைக்கான முடிவு திகதி இம் மாதம் 15 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையில் தேறியவர்களுக்கு எழுதுவினைஞர்' தட்டெழுத்தாளர் பதவிகள் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (இ - 3)

வைத்தீஸ்வர வித்தியாலயத்தில்

## ஆசிரியருக்கு பிரியா விடை

கொக்குவில், மார்ச் 6

''யாழ் மாவட்ட ரீதியில் பல விளையாட்டுப் போட்டிகளைச் சிறப்பாக நடாத்த உதவிய ஒருவர் ஒரே பாடசாலையில் 40 வருடசேவைக்குப்பின் ஓய்வு பெறுவது ஒரு சாதனை ஆகும்.

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகவும் உப அதிபராகவும் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு எஸ். இராஜதுரையைப் பாராட்டிப் பேசுகையில் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் திரு மு. இராமலிங்கம்மேற்கண்டவாறு தெரிவித்தார்

வித்தியாலய ஆசிரியர் கழகத்தலைவர் திரு சு. சந்திரபோஸ் தலைமையில் விழா நடைபெற்றது.

ஓய்வு பெற்ற உப அதிபர் திரு. எஸ். பன்னீர் செல்வம் பேசுகையில் திரு. இராஜதுரை ஒரு சமூக சேவையாளன்கூட தொழில் பார்ப்பவர்களுக்கு உற்ற நண்பன் ஒரு அரசியல்வாதி மாணவர்களுக்குஒரு நல்லாசான் எனக் குறிப்பிட்டார்.

வித்திலாய ஆசிரியர் நலன் புரிக் கழகத்தினரால்ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவில் ஓய்வு பெற்ற வித்தியாலய ஆசிரியர் திரு டீ. ஏ. ரீ. தம்பிநாயகமும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (இ-69)

## சங்கத்துக்கு கடிதம்

குருநகர் மார்ச் 6

யாழ்' இராசாவின் தோட்டம் முலவைச்சந்தி ஆகிய இடங்களில் இருந்து குருநகர் போதைவஸ்து ஒழிப்புச்சங்கத்திற்கு கடிதம்அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் கையெழுத்திட்டு அனுப்பி வைத்திருக்கும் இக்கடிதத்தில் அப்பகுதிகளில் வடிசாராயம், கஞ்சா ஹெரோயின் போன்ற பொருட்கள் விற்பனவு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. (இ-25)

# ஆறுமுக நாவலர் நினைவு கட்டுரை போட்டி முடிவு

கொக்குவில் மார்ச் 6

யாழ்ப்பாணம்விவேகானந்த சபையினரால் கடந்த ஆண்டு இறுதியில் நடத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டியில் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த செல்வி. கோ. ஸ்ரீவித்தியா, கீழ்ப் பிரிவில் முதலாம் இடம் பெற்று தங்கப்பதக்கம் பரிசாகப் பெறுகிறார்.

2 ஆம் இடம் செல்வன் கா. ஆதவன் யாழ்.இந்துக்கல்லூரி

3 ஆம் இடம் செல்வன் கி. தயாளன், யாழ். இந்துக்கல்லூரி.

மத்திய பிரிவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி கு. மேனகா 1 ஆம் இடத்தையும்(தங்கப்பதக்கம்) செல்வி சி. சிவலக்ஷமி 2 ஆம் இடத்தையும்செல்வன் ச. திருஞானசம்பந்தர் 3 ஆம் இடத்தையும் பெறுகின்றனர்

மேற்பிரிவில் பெரிய புலம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி இ. புஸ்பமாலா முதலாம் இடம் (தங்கப் பதக்கம்) பெறுகிறார்.

யாழ்சன்மார்க்க மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி சு. விஜயகுமாரி 2 ஆம் இடத்தையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சொ. ஷர்மிளா 3 ஆம் இடத்தையும் பெறுகின்றனர்.

சகல பிரிவுகளிலும் 2 ஆம் 3 ஆம் இடம் பெற்றவர்கட்கு வெள்ளிபதக்கம் பரிசாக வழங்கப்படும்.

மேலும் 10 பேர் புத்தகப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெறுவர். பரிசளிப்பு வைபவத்தைக் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகச் செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (இ-69)

## புத்தகக் கண் காட்சி

யாழ்ப்பாணம் மார்ச் - 6

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நாளை புதன் கிழமை இராமகிருஷ்ண, விவேகானந்தா புத்தகக் கண் காட்சி ஒன்று இடம்பெறும்.

சாவகச்சேரி நகரக் கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் காலை 9. 00 மணிக்கு மங்கல விளக்கேற்றிக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (இ)

## பாராட்டு விழா

தென்மாராட்சி திவ்யஜீவன சங்கம் உயர்திரு ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் ஸ்ரீ கணேசானந்தா மகாதேவா சுவாமிகளுக்கு. பாராட்டுவிழா ஒன்றை 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடாத்தவிருக்கின்றது. (க)

## பணிப்பாளர் விஜயம்

கல்வி அமைச்சின் மதிய உணவு பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளுக்கு நேரடி விஜயம் செய்து மதிய உணவு விநியோகம் தொடர்பாக ஆராய்ந்தார்.

மட்டக்களப்பு நகர பாடசாலைகள் சிலவற்றிற்கும், பட்டிருப்பு தொகுதியிலுள்ள சில முன்னணிப்பாடசாலைகளுக்கும் சென்று அவர் பார்வையிட்டார்.

மட்டக்களப்பு கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் தலைமயில் நடைபெற்ற இதுதொடர்பான மாநாட்டிலும் அவர் கலந்து கொண்டார். (இ-21)

# வாசகர் திருமுகம்

## கலாசாரப் பகுதி பொறுப்பாளர்

யாழ். செயலகத்தில் இயங்கி வரும் கலாசாரப் பகுதிக்கு கடந்த பத்து மாதங்களாக கலாசாரப் பகுதிப் பொறுப்பாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருக்கின்றது. இதனால் இப்பகுதியில் இயங்கி வரும் கலாசார நிறுவனங்களைப் பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கலாசாரப் பகுதிப் பொறுப்பாளரை விரைவில் நியமனம் செய்யும்படி சம்பந்தப்பட்டவர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

சி. வ. ராசா
கொழும்புத்துறை.

## நயினைப் பாலம்

சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தவன் செயலின் போது சேதமாக்கப்பட்ட நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் பாலம் இன்னமும் பூரணமாகத்திருத்தி அமைக்கப்படவில்லை, சென்ற ஆண்டு ஆலய உற்சவத்தின் போது ஓரளவு திருத்தி உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்றன. அதன் பின்னர் கடல் கொந்தளிப்பாலும் கடல் அரிப்பாலும் மீண்டும் பாலம் பழைய நிலையை அடைந்திருக்கிறது.

இந்தப் பாலத்தைத்திருத்த சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

சி, கிருபானந்தா
நயினாதீவு.

## மணிக்கூண்டுவீதி

கோட்டை, மணிக்கூண்டு வீதிப்பகுதியில் தெரு வெளிச்சம் இல்லாததால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

அப்பகுதியில் உடைந்த கற்களும், வீதிகளில் பள்ளங்களும், அறுந்த வயர்களும் இருப்பதால் இரவு நேரத்தில் மக்கள் செல்ல அஞ்சுகிறார்கள்.

மாநகரசபை கவனிக்குமா?

கு. நாதன்
யாழ்ப்பாணம்.

## விதவைகளுக்கு மறு வாழ்வு

1983 ஆம் ஆண்டு முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான விதவைகள் உருவாகியுள்ளனர்.

இவர்களில் பெரும் பாலானோர் இளம் விதவைகள்.

விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்க புனர்வாழ்வுத் திட்டங்களை உடன் ஆரம்பித்தல் வேண்டும்.

இந்த நற்பணியில் நல்லெண்ணம் படைத்த அனைவரும் ஈடுபடவேண்டும்.

பீ. இந்திரன்
நல்லூர்.

# கண்டதும் கேட்டதும்

இராமேஸ்வரம் மார்க்கமாக இந்தியா செல்பவர்களுக்கு பல அனுபவங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு சிறிய அலுவல்களுக்கும் ''சம்திங்'' கொடுப்பதும் அவற்றுள் ஒன்று.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் மூலம் யாழ்ப்பாணம் வருபவர்களுக்கும் இதுமாதிரி அனுபவம் ஏற்படுவதாக எமது வாசகர் ஒருவர் எழுதுகிறார்.

பொதி சிறிது பாரமாகி இருந்தால் போதும். பத்தோ அல்லது இருபதோ ரூபா வைத்தால் தான் ரயில் நிலையத்துக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறதாம்.

எப்படி இருக்கிறது நாட்டு நிலைமை?

-செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானுக்கு இனாமாகக் கிடைக்கும் அமெ. பீரங்கிகள்

தன்னிடம் மேலதிகமாக உள்ள கவசபீரங்கி வண்டிகளை பாகிஸ்தானுக்கு இலவசமாக வழங்க அமெரிக்கா தீர்மானித்து இருப்பதாக அமெரிக்காவில் வெளியாகும் பாதுகாப்பு சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் கவச பீரங்கிப்படை நவீனமயப்படுத்தப்பட்டுவருகிறது.

இதனால் மேலதிகமாக வரும் கவசபீரங்கி வண்டிகளை பாகிஸ்தான் உட்பட தாய்லாந்து, ஓமான், ஜோர்டான், ரியூனிஸியா, மொரொக்கோ ஆகிய நாடுகளுக்கு விற்க அமெரிக்கா தீர்மானித்து உள்ளது.

ஆனால் பாகிஸ்தானுக்கு இலவசமாகவே கவசபீரங்கிவண்டிகளை அமெரிக்கா வழங்கும் என்று ஊகிக்கப்படுகிறது (எ)

துணைப்பிரதமர் தேவிலாலின் மகனான

## ஹரியானா முதல் அமைச்சரால் தேசியமுன்னணிஅரசுக்கு நெருக்கடி

புதுடில்லி, மார்ச் 5

மாநிலத்தின் ஜனதாதள் ஹரியானா முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலாவை ராஜினாமாச் செய்யும்படி பாரதிய ஜனதா தலைவர் அடல் வாஜ்பாயி கேட்டிருக்கிறார்.

சௌதாலா போட்டியிட்ட மேஹம் சட்டசபைத் தொகுதியில் வாக்களிப்பின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் அம்பலமானதைச் தொடர்ந்து இந்த வேண்டுகோளை திரு. வாஜ்பாயி விடுத்தார்.

ஹரியானா மாநிலத்தில் உள்ள மேஹம் தொகுதி எம். எல். ஏ. ஆக திரு.தேவிலால் இருந்தார்.

மத்தியில் துணைப்பிரதமர் பதவியை ஏற்பதற்காக திரு. தேவிலால் மாநில முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தார். அதைத்தொடர்ந்து முதலமைச்சராக அவரது மகன் சௌதலா நியமிக்கப்பட்டார். காலியான எம். எல். ஏ. பதவிக்கு மேஹம் தொகுதி இடைத்தேர்தலில் சௌதாலா போட்டியிட்டார் அதற்கான தேர்தலும் அண்மையில் நடந்த எட்டு மாநில சட்டசபைத் தேர்தல்களுடன் நடந்தது.

அப்போது முதலமைச்சர் சௌதாலாவின் ஆதரவாளர்கள் தேர்தல் மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதைத் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

அத்தொகுதியில் மீண்டும் தேர்தல் நடத்தும்படி ஜனதாதள் கட்சியும் இந்திரா காங்கிரஸும் கோரியுள்ளன.

இதன் காரணமாகத்தான் பிரதமர் வி. பி. சிங். ஜனதாதள் கட்சியின் தலைவர் பதவியை இராஜனாமாச் செய்து விட்டார் என்று புதுடில்லி பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டன.

ஹரியான முதலமைச்சரால் மத்தியில் உள்ள ஜனதாதள் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் பதவியில் இருந்து தனது மகன் சௌதாலா விலகவேண்டியதில்லைஎன்று துணைப்பிரதமர் தேவிலால் கூறியுள்ளார். (எ)

## தினமும் 20 பேர் வரை தனுஷ்கோடி செல்கின்றனர்

தனுஷ்கோடி மார்ச் 5

இலங்கையில்இருந்து தனுஷ்கோடிக்கு படகுகள்மூலம் தினமும் இலங்கைத் தமிழர்கள் மற்றும் போராளிகள் ஆகியோர் செல்கின்றனர்.

தினமும் சராசரி 20 ஆண்கள் வரை தனுஷ்கோடி சென்றடைவதாக அங்கு இருந்து வரும் செய்திகள்தெரிவித்தன.

1964 ஆம் ஆண்டு புயல் வீசியபோது அழிந்து போன தனுஷ்கோடியில் இப்போது மீனவர் மட்டுமே வசித்து வருகின்றனர்.

அதிகாலை தனுஷ்கோடி சென்றடையும் தமிழ் அகதிகள்மீனவர்களின்குடிசைகளில் இரவைக் கழித்து விட்டு அடுத்த நாள் காலையில் ராமேஸ்வரத்துக்குப் புறப்படுகின்றனர்.

சில அகதிகள் தனுஷ்கோடி பொலிஸ் காவல் நிலையத்திற்குச் சென்று தங்களைப் பற்றிய விவரங்களைப்பதிந்து விட்டுச் செல்கின்றனர். பின்னர் வானொலி தொலைபேசி மூலம் இராமேஸ்வரத்திற்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

## விமானத்தில் இருந்து வந்த ஐஸ் வீட்டினுள் விழுந்த அதிசயம்!

பாரிஸ் மார்ச் 5

வானில் பறந்து சென்று கொண்டிருந்த விமானம் ஒன்றில் இருந்து வெளியே வீசப்பட்ட 8 கிலோ ஐஸ்கட்டி ஒரு வீட்டின்-கூரையைத் துளைத்துக் கொண்டு படுக்கை அறையில் இருந்த கட்டிலில் விழுந்தது.

பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸின் கிழக்குப்புற ஊரின்வெயரிஸ் சர்– மார்ன் என்னும்இடத்தில் இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அச்சமயம் வீட்டினுள் எவரும் இருக்கவில்லை. வெளியே சென்றிருந்தனர்

அதி உயரத்தில் சென்று கொண்டிருந்த விமானம் ஒன்றில் இருந்து இந்த ஐஸ்கட்டி வீசப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர். (எ)

## மத்திய கிழக்குப் பிரச்சினை பேச்சுக்களில் முன்னேற்றம்

### அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன் மார்ச் 5

மத்திய கிழக்கில் அரபு இஸ்ரவேல் தகராறுகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகள் பயனளிக்கஆரம்பித்துள்ளன. என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

தென் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க ராஜாங்க அமைச்சு உதவிச் செயலாளர் திரு. ஜோன்கெல்லி இத் தகவலை வெளியிட்டார்.

மத்திய கிழக்குப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு நாடுகளுடனும் அமெரிக்கா பேச்சுக்கள் நடத்தி வருகிறது. அப்பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படுகிறது.

1948 இல் இஸ்ரவேல் நாடு உருவாக்கப் பட்ட பின்னர் இருந்த நிலைமையிலும் பார்க்க இஸ்ரவேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் நெருங்கிப் பேசக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் திரு. கெல்லி சொன்னார். (எ)

## ஒரிஸ்ஸா முதலமைச்சராக பட்நாயக் பதவி ஏற்பு

புவனேஸ்வரம், மார்ச் 5

ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சராக பிஜூ பட்நாயக் இம்மாதம் 5 ஆம் திகதி பதவி ஏற்க இருக்கிறார்.

147 ஆசனங்களைக் கொண்ட ஒரிஸ்ஸா சட்டசபைத் தேர்தலில் 123 இடங்களைக் கைப்பற்றியதன் மூலம் 5 இல் 4 பங்கு பெரும்பான்மையை ஜனதா தளம் பெற்றுள்ளது.

ஜனதா தள அமைச்சரவையும் அன்று பதவி ஏற்கும். (எ)


## கொம்பியூட்டர் கல்வி

BASIC PROGRAMMING COURSE

Commencing on: 07 - 03 - 1990 (Wed & Fri) 8.30 a.m.

10 - 03 - 1990 (Sat & Sun) 8.30 a.m.

IDP COMPUTER CENTRE

342, K.K.S. Road, Jaffna.

(சிவன் கோவிலடி) (சி/3484)



## வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 6248 வரை வெற்றுச்சாக்குகள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்கு உண்டு.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 15 - 03 - 1990**

விண்ணப்பங்களிற்காக விண்ணப்பப் படிவங்களை சங்க காரியாலயத்தில் 14 - 03 - 1990வரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்பத்திரம் ரூபா 10 செலுத்தி சங்க செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும். மீளளிப்பு வைப்புப் பணம் ரூபா 300/– ஆகும்.

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம்,
பரந்தன்.

(சி/3424)


## அந்தியேட்டி அழைப்பு



திருமதி
ஆதிநாராயணசாமி பங்கயற்செல்வம்
(பட்டம்மா)

மண்மீது: 15 – 03 – 1919

விண்மீது: 05 – 02 – 1990

பாசமிக்க அன்னையாய், பரிவுமிக்க ஆசானாய்,
பண்புநிறை நற்பாட்டியாய்,
பரந்து நிழல் கொடுக்கும் பருவிருட்சமமாய் - நாம்
பாண்டித்தியம் பெறவேண்டிப் பணிகள்
– பல செய்தாயே
பறந்துதான் போனதென்னே' பாழ்விதிதான்
– அழைத்ததுவோ!!

நாளை நடை பெறவிருக்கும் எம் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம் பிரிவால் துயருறும்
மகன், மகள்மார், மருமகன்மார், மருமகள்:
பேரப்பிள்ளைகள்.

நாவலிகண்டு,
பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.

[2719]

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர் கு. தில்லைராஜன்

தோற்றம்: 04 - 12 - 1964

மறைவு: 27 - 02 - 1988


நீ மறைந்து ஈராண்டு
நிலவுமிந்த வேளைதனில்
நாம் மறந்து போவோமா
நற் சுதனே செல்வமே!
தாய் வருந்தித் தத்தளிக்கும்
தாங் கொணாச் சோகநிலை
நீயறியாய்! எப்போதும்
நினைவுதனில் நிற்பாயே!

உன்பிரிவை ஆற்றாது துடிக்கும்,
அம்மா கு. அகிலேஸ்வரி.

அல்வாய்.

(11917)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. ஞானப்பிரகாசம் தவராஜா (G.T.R.)

அன்னை மடியில்: 07 – 01 – 1954

ஆண்டவன் மடியில்: 06 – 03 – 1985

உன் அன்பான புன்சிரிப்பாலும், பண்பான பேச்சாலும், பணிவான நடத்தையாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றாய்? போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தைதான் சொன்னாயா? கொடியவர்கள் உன்னை பதை பதைக்கக் கொன்று விட்டார்களே! காலமெல்லாம் எங்களுக்கு வழி காட்டியாக இருப்பாய் என இருந்தோம். காலன் உன்னைப் பாதி வயதில் பறித்தானே? நீ சென்றாலும் நீ விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது. உன் ஆத்மா சாந்தி அடைய அந்தோனியாரை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தாய், சின்னையா, மாமிமார் தம்பிமார்,
தங்கைமார், மச்சான்மார், மைத்துனிமார், இளையய்யா, இளையம்மா, அப்பா,
G. தேவராசா குடும்பத்தினர்.

சுப்பர்மடம், பருத்தித்துறை.

[2721]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



நயினை திரு. வேலாயுதம் சபாரெத்தினம்
(கணக்காளர் K. K. A. K. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்)

மலர்வு: 29 – 09 – 1939

உதிர்வு: 04 – 02 – 1990

அப்பா........!

கற்பூரதீபமாக ஒளிதந்து எம்மை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! நகைச்சுவையால் அனைவரது இதயங்களையும் கவர்ந்தீர்களே! எமக்கு காலமெல்லாம் வழிகாட்டியாக இருப்பீர்கள் என நினைத்திருந்தோம். திடீரென எம்மைப் பிரிந்து சென்று விட்டீர்களே!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

நயினாதீவு-5A.
06-03-1990

[2713]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரோஸ்-விடுதலைப் புலிகள்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றாக இதுதென்படுகிறது.

1987 ல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்த நகல் கூட எமக்கு புதுடில்லியில் தரப்படவில்லை.

அந்த நிலையில் திம்பு மாநாட்டில் சகல தமிழ் மக்களும் எடுத்த ஒரு நிலைப்பாட்டையே 1987 ஒப்பந்தம் தயாரானபோதும் தமிழ்க் குழுக்கள் எடுக்க வேண்டும் என்று ஈரோஸ்விரும்பியதுஇதற்கான முயற்சியை ஈரோஸ் எடுத்தது. இது குறித்து புளொட், ரெலோ இயக்கங்களுடன் ஈரோஸ் தொடர்பு கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கொண்டுள்ள பகைமையைப் பொருட்படுத்தாமல் ஏனைய தமிழர் அமைப்புக்கள் ஒருமித்த தீர்வு ஒன்றை ஒப்பந்தம் குறித்து மேற்கொள்ள வேண்டும் என்றே நாம் விரும்பினோம்.

## ஒப்பந்தம் குறித்து....

1987 ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையேயானது. இதை நாம் ஏற்கவேண்டியதில்லை என்று கூறினோம். இந்த ஒப்பந்தத்தால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுவரப் போவதில்லை என்பதுதான் ஈரோஸின் நிலைப்பாடு.

இப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் கூறும் கருத்துக்களில் அர்த்தமிருப்பதாக தெரியவில்லை.

1987 ஜூலையில் ஒப்பந்தம் தயாரானபோனது நாம் கூறியதைத்தான் இன்று ஈ. பி. ஆர். எல். எவ். ஒப்பந்தம் பற்றிக் கூறுகிறது.

இப்போது இதனைக் கூறுவது பேரம்பேசும் தந்திரோபயமாகத் தான் தெரிகிறது.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மீண்டும் நீங்கள் இணக்க நிலை ஏற்படுத்திக்கொள்வது பற்றி லதரப்பட்ட அபிப்பிராயம் நிலவுவது பற்றி...?

பதில்: எமது இயக்கத்தின் அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் 1977 முதல் 1983 வரை வித்தியாசமாகத் தான் இருந்தது.

## ஈரோஸின் போராட்டம்

எமது தேசிய விடுதலைப் போராட்டம் வர்க்கப் போராட்டத்தை முதன்மைப் படுத்துவதாக அமைந்தது.

தமிழ் பேசும் தொழிலாளர்களின் சிறப்பாக மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் நலன்களை முன்னிறுத்தி எமது போரா. ட நடவடிக்கைகள் அமைந்தன.

இன ஒடுக்கல் என்ற போர்வையில் தமிழ்பேசும் தொழிலாளர் ஒதுக்கப்பட்டனர்.

1983 இல் இனக்கலவரம் வெடித்தது. இந்தியாவின் நேரடித் தலையீடும் ஆயுத உதவியும் அதைத் தொடர்ந்து ஆரம்பித்தது.

இனரீதியான அடக்குமுறை கூர்மையடைய ஆரம்பித்தது. இந்த நிலையில் 1984இல் எமது பொதுக்குழு கூடி ஏனைய இயக்கங்களுடன் நல்லுறவை வளர்ப்பது என்று தீர்மானித்தது. அப்போது இருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சுமுகமான நிலைமை இருந்து வந்தது. இதற்குத் தரை நிலைமையும் உதவியது.

## உரசல் நிலை எப்படி வந்தது?

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தான் விடுதலைப் புலிகளுடனான உறவில் உரசல் நிலை ஏற்பட்டது.

விடுதலைப்புலிகள் -இந்திய அமைதிப்படை மோதல் ஏற்பட்டது.

புலியியல் அரசியல் கணிப்பில் சிறிய தவறு ஏற்பட்டது என்று நாம் கருதினோம்.

இதனால் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையேயான மோதலைத் தணிப்பதில் நாம் ஈடுபட்டோம்.

அந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் இலக்கு என்ன என்பதை நாம் புரிந்து கொள்வதில் சிறிய தவறு செய்து விட்டோம்.

எமக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே உரசல் நிலையின் ஆரம்பம் இப்படித் தான் ஏற்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தம் வசப்படுத் தும்இருந்தது. முயற்சியில் இந்தியப் படை தோல்வி கண்டது. அதன் பின்னர் அவர்களுக்கு எதிராக அரசியல் மாற்றுச்சக்தி ஒன்றைக் கட்டி எழுப்ப இந்திய அமைதிப்படை முயற்சித்தது.

## இந்தியப் படையின் பழி வாங்கும் நடவடிக்கை

இதற்காக இந்திய அமைதிப்படை முதலில் எம்மை அணுகியது. இதற்கு இணங்க நாம்திட்டவட்டமாகமறுத்து விட்டோம்.

இதன் காரணமாக ஈரோஸைப் பழிவாங்கும் நடவடிக்கையில் மறைமுகமாக இந்திய அமைதிப் படை ஈடுபட்டது.

முறையற்ற தேர்தல் ஒன்றின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் ஈ. பி. ஆர். எல். எவ். பங்கு ஏற்றது இதன் மூலம் ஒரு பொம்மை அரசு உருவானது.

அதன் பிறகு மாகாண சபைச் சக்திகள் ஈரோஸுக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் தொல்லைகள் கொடுத்து வந்தன. எமது குரல் வளையை நசுக்க மாகாண சபைச் சக்திகள் முயற்சித்தன.

இதில் இருந்து தப்ப அரசியல் கட்சியாக மாறுவது தான் ஒரு வழி என்று நாம் தீர்மானித்தோம் இதன் மூலம் மாகாணசபைச் சக்திகளின் நசுக்கலைத் தடுக்கலாம் என்று நினைத்தோம்.

## இரண்டு சாதனைகள்

நாம் அரசியல் கட்சியாக மாறியது அந்த சந்தர்ப்பத்துக்குரிய அரசியல் தந்திரோபயமேயன்றி வேறில்லை. இது கொள்கை ரீதியில் எடுக்கப்பட்ட முடிவல்ல.

இந்த நடவடிக்கை மூலம் இரண்டு சாதனைகளை நாம் புரிந்துள்ளோம்.

ஒன்று, நமது இயக்கத்தினுடைய வடிவமைப்பை அழியாமல் — நசுக்கப்படாமல் பாதுகாக்கக் கூடியதாக இருந்தது.

இரண்டாவது, மாகாண சபைச்சக்திகளை மக்கள் ஏற்கவில்லை என்பதை தேர்தல்கள் மூலம் உலக மக்களுக்கு நாம் நிரூபித்துக் காட்டக் கூடியதாக இருந்தது.

நாடாளுமன்றம் செல்வதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்ற மாயயை நாம் ஏற்படுத்த முயலவில்லை. நாடாளுமன்றத்தை அரசியல் பிரசார மேடையாகப் பாவிக்கும் ஒரு நடவடிக்கையே இது.

## தலைமையை அழிக்க முயற்சி

இதன் பின்னர் மாகாண சபைச் சக்திகள் ஈரோஸ் இயக்கத்தின் தலைமையை அழித்து விட முயற்சிகள் எடுத்து வந்தன.

ஈரோஸின் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் உயர் மட்டத்தலைவர்களைக் கொல்ல இச் சக்திகள் முயற்சிப்பதாக எமக்குத் தகவல் கிடைத்தன.

இந்த ஆபத்துக்களில் இருந்து தனது உறுப்பினர்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலை ஈரோஸுக்கு ஏற்பட்டது.

இந்தியப்படைகளிடம் நாம் ஒப்படைத்த ஆயுதங்களின் ஒரு பகுதியை எமது பாதுகாப்பிற்காகத் திருப்பிப் பெற்றுக் கொண்டோம்.

நாடாளுமன்றம் சென்றதன் காரணமாக, ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தி எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காகக் கூடுதல் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டோம்.

இப்படியான நடவடிக்கைகள் தான் எமக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தியது.

மாகாணசபை சக்திகளினால் ஆபத்து வந்த போது ஆயுதங்களுக்காக அல்லது பிற உதவிகளுக்காக தங்களை நாடாமல் இந்தியாவை நாங்கள் நாடியது விடுதலைப் புலிகள் தரப்பில் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம்.

## கருத்து முரண்பாடு

நமது பாதுகாப்புக் கருதி நாம் எடுத்த இத்தகைய முடிவுகள் தான் விடுதலைப் புலிகளுக்கும் எமக்கும் இடையே கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவித்தது.

கடந்த பெப்ரவரியில் எமது பொதுச்சபை கூடி இது பற்றி ஆராய்ந்தது.

அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைக்கு ஈரோஸ் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது.

1984 தொடக்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இருந்து வந்த நல்லுறவு மீண்டும் தொடரப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு எழுதிய அக் கடிதத்தில் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்வதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'அவசரப்பட வேண்டாம்' என்று திரு. பிரபாகரனிடம் இருந்து அக் கடிதத்திற்குப் பதில் கிடைத்தது.

இந்திய அமைதிப்படை முற்றாக விலகிய பின்னர் எமது அரசியல் நடவடிக்கைகள் பற்றி பேசிக்கொள்ளலாம் என்று விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை அறிவித்துள்ளது,

இவ்வாறு திரு. பாலகுமார் கூறினார்.

# தமிழ்க்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நேருவும் ' ங்குபற்றினர்.

உத்தேச சர்வஜன வாக்கெடுப்பு, அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம், வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேச்சுக்களின்போது அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது. (ஓ)

# ஸ்ரீலங்கா படையிடமிருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
டும். முடியாமல் போனதற்கு முக்கிய காரணம், புலிகளுக்கு இருந்த மக்கள் பலம்தான்...

கேள்வி: இந்தியப் படையுடன் நடந்த போரில் விடுதலைப் புலிகளை அழிக்க முடியவில்லை என்பது உண்மை. அதேசமயம், 'ஒரு கையைக் கட்டிப் போடப்பட்ட நிலையில்தான் யுத்தம் நடத்தினோம்' என்று இந்திய அதிகாரிகள் கூறினார்கள். இது உண்மையா...?

## இந்தியப்படையின் அழிப்புகள்

பதில்: அது உண்மை இல்லை. இந்தியப்படை எதைத்தான் பயன்படுத்தவில்லை? விமானங்கள், டாங்கி, வானூர்திகளைக் கொண்டு 250 கிலோ கிராம் குண்டுகளை வீசினார்கள். T-72 டாங்கிகளைக் கொண்டு தாக்கினார்கள். பீரங்கிமூலம் குண்டுகளை லட்சக்கணக்கில் வீசினார்கள். பாடசாலை, வைத்தியசாலைகள், அகதி முகாம்கள், பல்கலைக்கழகங்கள், வழிபாட்டுத் தலங்கள் எல்லாவற்றையும் தாக்கி அழித்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு மாத யுத்தத் தாக்குதல் பவானில்(Operation Pawan), யாழ்.மாவட்டத்தில் வாழ்ந்த பத்து லட்சம் மக்களில் ஐந்து லட்.சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டார்கள். ஒரு மாதத்துக்குள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

இவற்றையெல்லாம் நாங்கள் எதிர்த்து நின்றோம் என்றால், மக்கள் பலம் - லட்சியத்தில் உறுதி - லட்சியத்துக்காக உயிரைத் தர இருந்த போராளிகள் - உறுதியான தலைமை ஆகியவை தான் காரணமாகும்...

## பிரபாகரன் கருதியது என்ன?

கேள்வி: சுதுமலையில் 'இந்திய வீரருக்கு எதிராக எங்கள் துப்பாக்கி நீளாது' என்று பிரபாகரன் கூறினார். அந்த நிலைமை மாறி, யுத்தம் ஏற்பட்டபோது பிரபாகரன் கருதியது என்ன...?

பதில்: 'இந்தியப்படை எங்கள் மக்களின் பாதுகாப்பை ஏற்றுக்கொள்கிறது. இந்திய இராணுவத்துக்கு எதிராக நான் துப்பாக்கியை நீட்ட விரும்பவில்லை. எனவே ஆயுதங்களை ஒப்படைக்கத் தீர்மானித்தோம்' என்று தான் பிரபாகரன் கூறினார்.

இந்தியா எங்கள் மக்களைப் பாதுகாக்காமல் அழிக்க முற்பட்டபோது, இந்திய இராணுவத்துக்கெதிராக ஆயுதத்தை ஏந்தி ஈழ மக்களைப் பாதுகாப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை...

கேள்வி; முன்னாள் தூதர் டிக்ஸிற் பங்கு என்ன...? வெளிப்படையாகக் கூறுங்கள்...

## டிக்ஸிற்றின் அக்கறை

பதில்: டிக்ஸிற் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர். தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசாமல், அவர்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாமல் உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார். புலிகளை இரண்டு நாளில் அழித்து விடலாம் என நினைத்தார்.

டிக்ஸிற்றின் சுய கௌரவமும், சுயநலமும் இந்தியப் படை-புலிகள் போருக்கு முக்கிய காரணங்களாகும்...

கேள்வி: ஈழத்தில் இந்தியப்படைகள் வெளியேறிய பிறகு நடக்கப்போவது என்ன...? இலங்கை அரசையும் பிரேமதாசாவையும் நம்ப முடியுமா...? இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை அழிக்கத் தாக்குதல் நடத்தினால்...?

பதில்: இந்தியப்படைகள் வெளியேறிய பின் மாகாண சபை கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாகாண சபையை ஓர் இடைக்காலத் தீர்வாக ஏற்று போட்டியிடுவோம். பின், நிரந்தரத் தீர்வுக்காக அரசியல் ரீதியாகப் போராடுவோம்.

## பேச்சுவார்த்தை

பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையின் அடிப்படையில் தான் நடக்கின்றன. நாங்கள் பலத்தோடு பேசுகிறோம். ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளைத் தாக்காது என்ற அடிப்படையில்தான் போர் நிறுத்தம் செய்யப்பட்டு, பேச்சுவார்த்தை நடக்கிறது. ஸ்ரீலங்கா இராணுவம் தாக்கினால், ஈழ மக்களைப் பாதுகாக்கும் பலம் எங்களுக்கு இருக்கிறது!

கேள்வி: ஈழப் பிரச்சினை தீர தங்கள் இறுதியானகோரிக்கைகள் என்ன...?

பதில்: எங்கள் மக்களின் சுதந்திரம், கௌரவம், பாதுகாப்பைத் தரக்கூடிய ஒரு தீர்வையே இறுதித் தீர்வாகக் கருதுகிறோம்...

கேள்வி: விடுதலைப் புலிகளின் அமைப்பு முழுவதுமாகத் துப்பாக்கிகளைக் கீழே போடும் நாள் எப்போது வரும்...?

பதில்: விடுதலைப் புலிகள் ஈழ மக்களின் பாதுகாப்புக்காக ஆயுதமேந்தினர். இந்த ஆயுதங்கள் அவர்களின் பாதுகாப்போடு இணைந்தது. தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பைத் தரும் தீர்வில் அவை பாதுகாப்புக்கான அமைப்போடு இணைக்கப்படும்...

கேள்வி: பிரபாகரன் எப்போது யாழ்ப்பாணம் திரும்புவார்...?

பதில்: இன்னும் ஒரு மாதத்தில் திரும்புவார்...

கேள்வி: பிரபாகரன் தேர்தலில் பங்கு பெறுவாரா...?

## தேசியத் தலைவர்

பதில்: பிரபாகரன் ஒரு தேசியத் தலைவர். ஒரு வரலாற்று நாயகன்— அவர் தேர்தலில் பங்கேற்கமாட்டார்.

கேள்வி: பிரபாகரன் இந்தியப் படையிடம் பிடிபடும்

(6ஆம் பக்கம் பார்க்க)


# தையல்கலையின் குதூகலத்தை அனுபவிக்க முதல்படி.

சிங்கர் தையல் இயந்திரம்

தையல் கலையின் குதூகலத்தை..அனுபவிக்க முதல்படி.


சிங்கர் - 'நேர்த்தையல்' தையல் இயந்திரம்..தையலின் மகிழ்வை அனுபவிக்க இலகுவழி, சிங்கர் நேர்த்தையல் - தையல்-இயந்திரம் உங்கள் வசதியையும், சௌகரியத்தையும் மனதில் கொண்டு உருவாக்கப்பட்டது.

இயக்குவதற்கு இலகுவானது பராமரிப்பதற்கும் இலகுவானது

ஆரம்பத்தையல் ஆர்வம் கொண்டவர்களுக்கும், அனுபவம்மிக்க தையல் விற்பன்னர்களுக்கும் ஏற்றவகையில் உருவானது.

உருக்கினுலான வடிவமைப்பு, கடின பாவனைக்கும் நீண்ட காலம் ஈடு கொடுக்கக் கூடியது.

113 வருடகால அனுபவமும், நம்பகமான விற்பனைக்குப் பிந்திய சேவையும், நாடளாவிய விற்பனையாளர் அமைப்பு முறை சிறப்பும் கொண்டது. சிங்கர் - 'நேர்த்தையல்' தையல் இயந்திரம்.




விலை ரூபா 5, 690/- மேலாக

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ஒரு நூற்றாண்டிற்கு மேலாக... இன்னமும் சிறப்புடையது.

ZENITH


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!

★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம் இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

06 - 03 - 1990 செவ்வாய்க்கிழமை

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!

தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவுவாடகைக்குப்பெற

பிறைற் ஹவுஸ்

(சென்: ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★காணியற்றவர்களுக்கு

## அரசகாணிகளை பகிர்ந்தளிக்க யாழ் மாவட்டத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்- மாவட்டத்தில் காணியற்றவர்களுக்கு அரச காணிகளை பகிர்ந்துவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை, வேலணை ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மருதங்கேணி, பருத்தித்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான காணிகளே காணியற்றவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

அந்த அந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளவர்களுக்கே முதலிடம் அளிக்கப்பட இருக்கிறது.

காணியற்றவர்களுக்கு காணி வழங்கும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் திட்டத்தின் கீழேயே இந்நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. (ஒ-3)

## தினசரி $1\frac{1}{4}$லட்சம் லீற்றர் எரிபொருள் விற்பனை!

யாழ்ப்பாணம் மார்ச் 6

யாழ் - மாவட்டத்தில் தினசரி சுமார் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் லீற்றர் எரிபொருள் விற்பனையாவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாகப் பெரிதும் வீழ்ச்சியடைந்திருந்த எரிபொருள் விற்பனை தற்பொழுது தினசரி உயர்ச்சி அடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் பெற்றோல் தினசரி சுமார் 30 ஆயிரம் லீற்றரும், டீசல் சுமார் 50 ஆயிரம் லீற்றரும், மண்ணெண்ணை சுமார் 40 ஆயிரம் லீற்றரால் விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

விநியோகிப்பதற்குத் தேவையான எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ - 10)

## பதிவாளர் அலுவலகம் 14 முதல் கிளிநொச்சியில் இயங்கும்

### ஆவணங்கள் அனுப்பப்பட்டுவிட்டன

யாழ்ப்பாணம், மார்ச். 6

கிளிநொச்சி பகுதிக்கான பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான சகல பதிவு வேலைகளும் யாழ். மாவட்டத்துடன் இணைந்து யாழ். அரசாங்க செயலகத்தில் இடம்பெற்று வந்தன.

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தனியான பதிவலுவகம் ஆரம்பிக்கும் நோக்குடன் இங்கிருந்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனுப்பட்டன.

கிளிநொச்சி அலுவலகம் எதிர்வரும் 14 ஆம் திகதி இயங்க ஆரம்பிக்க இருக்கிறது. (ஒ — 3)

பிறப்புச்சான்றிதழ்:

## 1954 பின் பிறந்தவர்களுக்கு மீண்டும் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். செயலகத்தில் 1954 ஆம் ஆண்டுக்குப்பின் பிறந்தவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டுக்குப்பின் பிறந்தவர்களுக்கு வழங்க வேண்டிய இருபக்க பிறப்புச் சான்றிதழ் புத்தகங்கள் கொழும்பில் இருந்து வந்ததை அடுத்தே மீண்டும் அவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னர் வந்த விண்ணப்பங்களுக்கு முதலிடம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

யாழ். கல்விக் கோட்டத்தில்

## ஜீ.சீ.ஈ. முன்னோடிப் பரீட்சை நாளை முதல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். கோட்டக் கல்விப் பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளில் நாளை புதன்கிழமை முதல் ஜீ சீ.ஈ. (சா/த) முன்னோடிப் பரீட்சைகள் நடைபெற இருக்கின்றன.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு உதவும் வகையில் இப்பரீட்சைகள் நடத்தப்பட இருக்கிறது.

நாளை தமிழ் I, II, III ஆம் பகுதிகளும், வியாழக்கிழமை கணிதம் I, II ஆம் பகுதிகளும், வெள்ளிக்கிழமை சமூகக்கல்வி I, II ஆம் பகுதிகளும், திங்கட்கிழமை விஞ்ஞானம் I, II ஆம் பகுதிகளும், செவ்வாய்க்கிழமை ஆங்கிலம் I, II ஆம் பகுதிகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

இதேபோன்று மருதனாமடம், வேலணை, பண்டத்தரிப்பு கோட்டங்களிலும் இந்தப் பரீட்சை நடைபெற இருக்கிறது. [ஒ-3]

## விசாரணைகள் ஆரம்பம்!

பயிலுநர் ஆசிரியர் தெரிவு சம்பந்தமான முறையீடுகள் மீதான விசாரணைகள் கல்வித் திணைக்களத்தில் நேற்று ஆரம்பமாகின.

முறையீடு செய்தவர்கள் நேரடியாகத் தம்குறைகளைக் குழுவிடம் எடுத்துக் கூறினார்கள்.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ 3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 6-03-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இந்தியா செய்தது போன்று

# இயக்கங்களை மோதவிட்டுப் பார்க்க அரசு முனையக்கூடாது - பாலகுமார்

யாழ்ப்பாணம், மார்ச் 6

இந்தியா செய்தது போன்று தமிழர் இயக்கங்களை ஒன்றோடு ஒன்று மோதவைக்கும் வேலையில் இலங்கை அரசு முனையக்கூடாது.

இதை நான் அமைச்சர் ஹமீதுவிடம் நேரிலேயே கூறிவிட்டேன்.

இப்படிச் சொன்னார் ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன்.

கடந்த வாரம் அமைச்சர் ஜனாப் ஹமீதுவை திரு. பாலகுமாரன் தலைமையில் ஈரோஸ் குழு ஒன்று சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது.

அப்பேச்சுக்களின்போது பரிமாறப்பட்ட கருத்துக்களை திரு. பாலகுமாரன் உதயனுக்கு விரிவாக எடுத்துச் சொன்னார்.

அவர் சொன்னதாவது;

அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்வது என்று எம்முடன் நடத்திய பேச்சுக்களின் போது ஜனாதிபதி உறுதியளித்தார். அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

### சர்வஜன வாக்கெடுப்பு

வடக்கு - கிழக்கு இணைப்பு சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பு காலத்துக்குக் காலம் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. தமிழ் பேசும் மக்களின் 'தலைக்கு மேல் தொங்கும் வாள்' போன்று இந்த சர்வஜன வாக்கெடுப்பு அமைந்துள்ளது. இதை ரத்துச் செய்ய வேண்டும்.

இவற்றை எல்லாம் அமைச்சர் ஹமீதுவிடம் எடுத்துச் சொன்னோம்.

மாகாணசபையைக் கலைத்து தேர்தலை நடத்துங்கள் என்றும் அமைச்சரைக் கேட்டுக் கொண்டோம்.

மாகாணப் பொலீஸ்சேவை சட்டம்-ஒழுங்கு பராமரிக்கும் பொறுப்பை ஏற்கும்வரை தற்காலிகமாக இலங்கைப் பொலீஸ் பணிபுரிவதை நாம் ஆட்சேபிக்கவில்லை.

### இராணுவம் வேண்டாம்

இலங்கை இராணுவம் எக்காரணங் கொண்டும் தமிழர் பகுதிக்குள் அனுப்பப்படக்கூடாது என்பதை அமைச்சரிடம் வலியுறுத்தினோம்.

மக்கள் நெருக்கமாகவாழும் இடங்களில் இராணுவமுகாம்கள் இருக்கக்கூடாது; இருப்பவற்றை உடனடியாக விலக்கிக் கொள்ளவேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக்கொண்டோம்.

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருக்கும் இராணுவ முகாமும், திருகோணமலை பிரெட்ரிக் கோட்டைக்குள் இருக்கும் இராணுவ முகாமும் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும் அமைச்சரை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டோம்.

எல்லாக் கோரிக்கைகளையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதாக அமைச்சர் உறுதியளித்தார் — இவ்வாறு அவர் கூறினார். (ஒ-எ)

## ஆசிரியர் இடமாற்றம் உடனடியாக நிறுத்தம்!

### கல்விச்சேவை ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

சகல ஆசிரியர் இடமாற்றங்களும் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பாடசாலை ஆசிரியர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடந்து முடியும்வரை ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதில்லை என்று ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதனிடையில் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குள்ள காலியிடங்கள் பற்றிய ஆய்வு ஒன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி மாகாண மற்றும் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களை கல்விச்சேவைகள் ஆணைக்குழு கேட்டுள்ளது. (ஒ-எ)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க ஏற்பாடு

### விண்ணப்பம் கோரப்படுகிறது

கொழும்பு, மார்ச் 6

பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு தொண்டர் ஆசிரியர்களிடமிருந்து கல்விச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அரசாங்க பாடசாலை ஒன்றில் குறைந்தது ஒரு வருடம் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

வயதெல்லை 18 – 35க்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இம்மாதம் 16ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

கொழும்பு. மார்ச் 6

பட்டதாரிகளுக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியவுடன் தொழில் வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவது என்று உயர்கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறை அமைச்சு முடிவு செய்துள்ளது (ஒ — எ)

### ரஞ்சன் ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சதுரமைல் - இதில் 3ஆயிரம் சதுரமைல் காடாகும். 26 லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

தேவையானால் ஜனநாயக மற்றும் அரசியல் உரிமைகளுக்காகப் போராட எமது இளைஞருக்கு பயிற்சி வழங்கி ஆயுதம் வழங்குவோம்.

கேள்வி: இலங்கைப் பொலீஸாரும், படையினரும் வெளியேறிய பின்னர் வடக்கு கிழக்கில் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்கக் கூடிய பலம் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்திடம் உண்டா?

இது எங்கள் விவகாரம். நாம் அதைச் செய்வோம். 26 லட்சம் மக்கள் எமக்கு இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்தும் நாம் உதவி கோரத் தயாராக உள்ளோம். ஈழத்தின் இறைமை பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாக்க சர்வதேச உதவியைக் கூட கோருவோம்.

சுதந்திர ஈழத்தில் இருந்து வெளிநாட்டுப்படைகளை விலக்கிக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசுக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் கோடி காட்டியுள்ளேன்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இருந்து இலங்கைப் பொலீஸாரும் ஆயுதப்படையினரும் வெளியேறுவதற்கான காலக்கெடுவை சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய பேரவை விடுக்கும்.

கேள்வி: ஜனாதிபதி மாகாணசபையைக் கலைத்தால் அதற்கெதிராக நீதிமன்றத்தில் வழக்காடுவீர்களா?

அப்படிச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும். (ஒ-எ)

## இரத்த வங்கிக் கட்டடம் வவுனியாவில் திறப்பு

வவுனியா, மார்ச் 6

"வவுனியா மாவட்டத்தினதும் அதனைச் சார்ந்த பிரதேசத்தினதும் மக்கள் இரத்த வங்கியின் மூலம் கூடிய பலனைப் பெறவேண்டும். அத்துடன் அவர்கள் அமைதி சமாதானத்துடனும் வாழவேண்டும்"

இவ்வாறு வவுனியாவில் இரத்த வங்கி கட்டடத்தை வைபவரீதியாகத் திறந்து வைத்து உரையாற்றிய போரூட் நிறுவனத்தின் (நோர்வே) ஆளுநர்சபை உறுப்பினர் ரூரிட்போக்ஸ்டட் தெரிவித்தார்.

இரண்டரை லட்ச ரூபா செலவில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டடத்திற்குத் தேவையான உபகரணங்களை போரூட் நிறுவனம் வழங்கியுள்ளது.

இவ்வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தின் வவுனியா திட்டப் பணிப்பாளர் திரு. சொலமன் அபேபி தெரிவித்ததாவது: எமது வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இங்குள்ள அரச நிர்வாக அதிகாரிகளும் பொதுமக்களும் கூடிய ஒத்துழைப்பை வழங்கியது போல இரத்தவங்கியின் பலன்களைப் பெறுவதில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வே. ஸ்ரீராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் போரூட் நிறுவனத்தின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி திரு. ஆரி எரிக்சன், வவுனியா அரசஅதிபர் திரு. செ. பத்மநாதன் திட்டப்பணிப்பாளர் திரு. எஸ். ரங்கராஜன், பி. எஸ். பி. குலதுங்க, கேணல் ரட்னாயக்க் பொலீஸ் அத்தியட்சகர் திரு. எஸ். நவரட்ணராஜா, பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் பகுதியின் கணக்காளர் திரு. நடராஜா மற்றும் ஆஸ்பத்திரி வைத்தியர்கள் ஊழியர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள்.

வவுனியா ஸ்ரீ சத்தியசாயி சமித்தி தொண்டர்கள் விழா முடிவில் இரத்ததானம் செய்தார்கள் [illegible] (ஒ-164)

### ஸ்ரீலங்கா...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை எப்போதாவது ஏற்பட்டிருக்கிறதா...?

பதில்: பிரபாகரன் இந்தியப் படையிடம் பிடிபடும் நிலைமை என்ற பேச்சுக்கே இடமில்லை. பிரபாகரனை இந்தியப் படையால் உயிருடன் பிடிக்க முடியாது. இது இந்திய அரசுக்குத் தெரியும். ஆனால், பல தடவைகளில் பிரபாகரனும் இந்தியப் படையும் இருபது முப்பது மீட்டர் இடைவெளியில்கூட இருந்திருக்கிறார்கள்...

### நிதியுதவி

புதுக்குடியிருப்பு மார்ச் 6

ஒட்டுசுட்டான் உதவி ஆணையாளர் பணிமனையை அமைப்பதற்கு 12 லட்சத்து 60ஆயிரம் ரூபா கிடைத்துள்ளதாக அறியவருகின்றது.

## மரண அறிவித்தல்கள்

கோண்டாவில் கிழக்கு

### திருமதி பரிமளம் பொன்னுத்துரை

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கலட்டி அம்மன் கோவிலடியை வதிவிடமாக கொண்டவருமாகிய காலஞ்சென்ற திரு. சி. சி. பொன்னுத்துரையின் அன்பு மனைவி திருமதி பரிமளம் பொன்னுத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி இராசநாயகி நடராசா, பரமநாதன் (இளைப்பாறிய உதவி கணக்காய்வாளர் நாயகம்), கந்தசாமி (இளைப்பாறிய தபால் அதிபர்), திருமதி (டாக்டர்) குணநாயகி கந்தசாமி (சுகாதார வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை), திருமதி சுஜிதா நவரத்தினராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராசா (இளைப்பாறிய காரியாலய உதவியாளர்), திருமதி கமலராணி பரமநாதன், திருமதி கமலாசனி கந்தசாமி, திரு. பொ, கந்தசாமி (பிரதிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், திருகோணமலை), மு. நவரத்தினராசா (உதவி மின்சார பொறியியலாளர், இலங்கை மின்சார சபை, மாங்குளம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி (டாக்டர்) யசிந்தா சோதிநாதன் (U.K), திருமதி வசந்தா சந்திரகுமார் (நைஜீரியா), திருமதி ஜெயந்தா மயூரநாதன் (U.K), பகீரதன், சுகந்தி, குகாயினி, சதீஸ், கீதன் ஆகியோரின் பேத்தியாரும், பிரியா, றோசான், மீரா, சத்தியன், கவிதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 58/1, கலட்டி அம்மன் கோவில் வீதி இல்லத்தில் 06-03-1990 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

58/1, கலட்டியம்மன் கோவில் வீதி,
கலட்டி,. யாழ்ப்பாணம். [11957]

### திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை

திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் 04-03-1990 இல் காலமானார்.

இவர் செல்லத்துரை நகைமாளிகை உரிமையாளர் செல்லத்துரையின் அன்பு மனைவியும், புஸ்பம், காலஞ்சென்ற இராசேந்திரம், செல்வநாயகம் (தெய்வா நகை மாளிகை உரிமையாளர்), தனலெக்சுமி (ஒஸ்ரேலியா), விஜயலெக்சுமி (ஒஸ்ரேலியா), ஜெயலெக்சுமி (லண்டன்), இந்திராணி (ஒஸ்ரேலியா), கனகேஸ்வரி (ஒஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர் கந்தரோடை), பேராசிரியர் Dr. அரசரெட்னம்(ஒஸ்ரேலியா), அமிர்தலிங்கம் (கணக்காளர், ஒஸ்ரேலியா), Dr. ஜீவானந்தம் (லண்டன்), குணராஜன் (முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர்- ஒஸ்ரேலியா), பத்மநாதன் (பொறியியலாளர், ஒஸ்ரேலியா), அருந்தவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 07-03-1990 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
செ. செல்வநாயகம்
(தெய்வா நகை மாளிகை)

இல. 7, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம். [11960]

### திருமதி விஜயலக்சுமி (பிள்ளை)

கொக்குவில் செம்பியன் லேனைச் சேர்ந்த திருமதி விஜயலக்சுமி (பிள்ளை) கைலைநாதன் அவர்கள் 1990-03-05 ஆந் திகதி காலமானார்கள்.

இவர் கைலைநாதன் (பிரகாஷ் ரான்ஸ் போட் சேர்விஸ்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி கோபிதாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பத்மநாதன், பேரம்மா அவர்களின் அன்பு மகளும், S. P. S. ரான்ஸ்போட் சேர்விஸ் உரிமையாளர்களின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தவர்கள்

44, செம்பியன் லேன்,
கொக்குவில். [11961]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org